*News and Articles in Tamil and English Please send them to:*

**THE EDITOR,**

The Morning Star,
Diocesan Office,
Vaddukoddai

# THE MORNING STAR

Registered as a Nespaper at the General Post Office, Sri Lanka

Under No.Q / J / 104 / News / 89

*Established : 1841 : A Christian Weekly : Published Every Friday*

Vol. 156 Jaffna, Friday 24, March 1995 No. 12

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

Subscription Rs.100/-
For Advertisements

Apply to:
**THE MANAGER**

The Morning Star,
Dioecesan Office,
Vaddukoddai

Obituary

## Mr. S. S. Selvadurai

As briefly reported in our columns last week the funeral service of the late Mr. S. S. Selvadurai and a meeting of tributes by the Udupiddy public took place on Wednesday the 15th of March and not 16th as incorrectly stated in our earlier report. He died on Friday the 10th of March. The service at his home at Kaltuvam was held at 9.00 a m. After the service the body was taken to the American Mission College, Udupiddy where it was kept for about two hours to give an opportunity for the public to pay its respects.

Mr. N. Anantharaj the Principal of the American Mission College presided over the meeting and led in paying tributes to the late Mr. Selvadurai a former Principal of the College. About ten speakers spoke on behalf of the College, the Staff, Students, Alumni and the public of Udupiddy. Mrs Ambihai Balasingham spoke on behalf of the Sister School, the Udupiddy Girl's High School. Mr. Selvadurai began his career as a teacher at Jaffna College in 1930 and taught there for sixteen years till 1946. In 1946 he joined the American Mission Coll ge, Udupiddy as its Vice-Principal and became Principal in January 1957. He retired in 1971. He thus served the College as Vice-Principal and Principal for twenty five years. It was largely due to his efforts the Science Department of the School was developed. Most of the speakers referred to his ability as a teacher and how he made the subjects of Mathematics and Chemistry comprehensible even to the very average student. As an administrator he was a disciplinarian with a human touch. This helped in raising academic standards of the School.

He was a towering personality in Vadamaradchi and was a highy respected figure in the Udupiddy public. His counsel and advice was sought after by people in all walks of life.

After the meeting in the School the body was taken to the Udupiddy Church where a brief service was held before proceeding to the Church Graveyard. At the grave at about 1.30p,m. Bishop Jebanesan performed the committal rites assisted by the Revds. A. V. Jesuthasan, V. N. Tharmakulasingam and Mr.T.E. Ashokumar.

A tribute to his life appears elsewhere in this issue.

---

### Battle of the Golds

The 78th Annual encounter- 'The Battle of the Golds' was played at the 'Bicknell Field', Vaddukoddai. on 17th and 18th March, 1995. The match ended in a draw

The Scores:

St. Patrick's College 1st innings 242 all out.

2nd Innings 100 for 2.

Jaffna College 1st Innings 150 all out.

2nd Innings 50 no loss.

The following records were broken.

For Jaffna College 1st wicket partnership of 50 runs by M. Sujeev and S. Kesavan.

Wicket keeping Arooran four victims (2 Ct 2 St.)

For St. Patrick's

6th wicket partnership P. K. Prasanna & R.Shajahan (71). 8th wicket partnership S. prasanna & B. Joy Niroshan.

Following awards were made.

1. Best Bowler R. Sritharan

Runner up R. Giritharan (J.C.)

2. Best Batsman T. C, Rahurajah (SPC) runner up Sajahan (SPC).

3. Best fielder M. Arooran (J. C.)

4. Best all rounder K. Varaprathan(J.C.)

5. Man of the match B. Joy Niroshan (SPC).

### JAFFNA COLLEGE PRIZE GIVING

The Annual Prize Giving of Jaffna College took place in the College Quadrangle on 16th March 1995, at 5 p.m.

The Chief Guests Dr. N. Ethirveerasingam, Visiting Senior Lecturer, Feculty of Agriculture, University of Jaffna, the first Tamil to win a Gold Medal at the Asian Games and first Tamil to participate at the Olympics and Dr. Mrs. C. Ambalavanar, Medical Superintendent, Green Memorial Hospital, Manipay were taken in a procession by the staff and board members to the accompaniment of the College Band. The function started with the singing of the Hymn for Sri Lanka.

The Rev. S. Karunairaj, Superintending Minister, St. Peter's Methodist Church, Jaffna bid the opening prayer. Master K. Sugash President of the Primary School welcomed the guests and this was followed by a Primary School welcome dance. Dr. N. Ethirveerasingam delivered the Prize Day address and Mrs.C. Ambalavanar distributed the prizes. The Principal of the College Mr.G. Rajanayagam, who presided, read the Principal's report.

The Prize Day address was followed by a variety entertainment by the Secondary School. There was a choral recitation in English and two folk dances. The College Band also performed.

Vote of thanks was proposed by Mas. K. Varaprathan, the President of the School Council and seconded by Mr. A. Kumaravel, an alumnus and a teacher.

The function came to an end with the singing of the College Song.

---

## THANTHAI CHELVA

Ten and six years have quickly elapsed
Since Thanthai Chelva for Tamil sake collapsed
But the memory of his sincere dedication
Continue to inspire our cause for
self determination

Thanthai Chelva, a humble man of integrity.
Taught that none should flirt with popularity.
Nor desire promoting self interests
or of your "relation,"
Ever affirming that Tamil people are
a distinct nation

May that inner compulsion constantly intervene.
For the perishing Tamilians loosing much
haemoglobin.
Found much readily in Thanthai. Our 'Selvam.'
Continue to keep us awake until in hands
is Tamil Eelam

**Henry Victor**

# S. S. Selvadurai

In the death of Mr. Samuel Saravanamuthu Selvadurai on the 10th of March in his 84th year, the Church and the community at large have lost a great educationist, a public spirited gentleman and a man who served the Church and the community with unstinted devotion, unshakable loyalty and an unswerving commitment. He was one of the finest lay leaders of the Church whose services the Jaffna Diocese was proud to enjoy for over half a century.

"Jesus was a layman, with a layman's set of priorities. He did not live and die in order to found a society for the support of clergymen" wrote the English theologian D.L. Edwards. Mr. Selvadurai brought to bear on the life of the Diocese "a layman's set of priorities" and was a most effective instrument of the Church's mission and outreach programmes which turned the Diocese itself inside out in relation to the oppressed and suffering people in whose midst its lot was cast.

"Facts speak for themselves" they say and a brief listing of his career and services will be sufficient testimony to the big role he played in the life of our community.

As a brilliant student at Jaffna College in the Bicknell era he passed the Inter Science of the London University and began to teach at the College. In1940 he joined the University College, Colombo, and passed the London B. Sc. in 1942. He rejoined the Staff of Jaffna College but his stay there was not to be long for the Mission realised he had a bigger role to play and in 1946 was sent to build up the American Mission College at Udupiddy as its Vice-Principal. He spent a year at Selly Oaks College, Birmingham in 1948-49 and obtained the Diploma in Education. He was appointed Principal of the American Mission College, Udupiddy, in Jan 1957 and continued even after the nationalisation of Schools in 1960 as its Principal up to 1971 when he retired. It was during his Principalship the College grew as a leading school in the Peninsula and the Science Department in particular became well established. The late Prof. A. Thurairajah, Vice-Chancellor of the Jaffna University was one of his brilliant students and Professor Thurairajah generously acknowledged his debt to Mr. Selvadurai for stimulating his interest in Science. As an educationist he was held in high esteem.



No sooner he went to Udupiddy he became active in the Udupiddy Church. One of his great services to that Church was in raising funds and overseeing the construction of the new Church building in the late 1940s. He was the Udupiddy Church's delegate to the Diocesan Council for several decades.

## THE RT. REV. D. J. AMBALAVANAR

In 1946 he was one of the delegates from the Jaffna Council of the S. I. U. C., when the General Assembly of the S. I. U. C. met in Madras Christian College, Tambaram and took the historic decision to lose its separate identity and unite with the Anglicans and Methodists in South India to form the Church of South India Later in September 1947 he was again among the small delegation from Jaffna to be present at the Inauguration of the C.S.I. and the consecration of the new Bishops including Bishop Kulandran, at St. George's Cathedral, Madras.

It is his twenty years of service as the Treasurer of the Diocese for which he will be most remembered. Eight years during Bishop Kulendran,s period and twelve after 1971 It was a honorary assignment and a post to which he was elected every year. The Board of Directors of Jaffna College also engaged his services as its Treasurer for some years. He served the Diocese in several other capacities. A member and for some time Secretary of the Medical Board, Chairman of the Uduvil Girls' College Board and Manager of the Uduvil Girls' College for several years. Member of the Councils of the Jaffna College Institute of Technology, the Christian Theological Seminary and the C.I.S.R.S. Board. He represented the Diocese for several years on the Synod of the Church of South India and served on the Synod Executive Committee and Finance Committee. As a loyal old boy of Jaffna College he was right to the end an active membe of the Alumni Association. He served on the Jaffna College Board of Directors for many years and held at various periods the offices of Secretary, Treasurer, Vice-Chairman and Chairman.

His services were by no means confined to church organisations. When the public of Udupiddy decided to set up a Textile Mill he was the obvious choice as the Chairman of that Board. The Mill was a great success until the war situation brought it to a halt. The Udupiddy public also established a co-operative Hospital. He was again its choice as Chairman. He was active in the North Ceylon Union of Teachers and represented the Union along with the late Mr. N. Sabaratnam at an International Conference on Education in New Delhi.

The list could go on but we can rest content that these facts will speak for themselves. However it is good to heed the warning of the Philosopher A. N. Whitehead, "the facts do not speak for themselves. They have to be interpreted." When the facts are so impressive surely it is more important to discern what gave rise to those facts. It was so manifestly something in the character, disposition and outlook of the man that made him such a sought after person for the numerous honorary offices he held besides his primary responsibility as Principal of a leading College in the North. Bernard Shaw once quipped, "those who can, do; those who can't, teach." Mr. Selvadurai was one who defied that saying and proved that one can both do and teach successfully. The secret behind all this was his simple and steadfast Christian faith which moulded his character and determined the direction of his life. He was the very embodiment of reliability, dependability, probity and rectitude. All this he combined with an unassuming nature and a quiet efficiency. In committee meetings he would readily answer questions but if controversies arose he acted on the Chestertonian advice, "silence is the unbearable repartee."

The Psalmist's picture of the righteous man "like a tree planted by the rivers of water, that bringeth forth his fruit in his season; his leaf also shall not wither; and whatsoever he doeth shall prosper" will be an apt description of the life of Mr. Selvadurai. With all his wide involvement in public life he gave due attention to his family. He was blessed in his marriage to his saintly wife Rasamma who predeceased him. She was herself a teacher and the two of them made a success of their family. Their two sons who became doctors brought much pride to the parents He had a hobby and that was his farm at Kalluvam which again he cultivated successfully. He was so generous with its products that people wondered if that was the main reason for his cultivating the farm. Whether it be his College, the family, the farm or the numerous responsibilities to which he laid his hand, it could be said, "whatsoever he did, did proper." He never failed to be grateful to God and we praise and thank God for the life of such a "good and faithful servant of God."

### Battle of the North

The annual Cricket encounter between St. John's College, Chundikuli and Jaffna Central College, Jaffna. 'The Battle of the North' ended in a draw on 18th of March, 1995.

The scores: St. John's 1st Innings 225 all out.

2nd Innings 209 for 9.

Jaffna Central 1st Innings 177 all out.

## லெந்துகாலச் சிலுவைச் சிந்தனைக்கு



**அன்று**

தோளை யழந்திடும் பாரச் சிலுவையைத்
 தூக்கிச் சுமந்து வந்தார் இயேசு
ஆளை நசுக்கிடும் கோரக் குருசெனும்
 ஆலையதில் நலிந்தார் கடுஞ்
 சாலைவழி நடந்தார்
கூனிக் குறுகிய தேகம் முழுவதும்
 கோலம் இழந்ததுவே அவர்

மேனி தனில்பெரு வாதை மிகுந்தெழ
 மேலும் நடந்திட வாளார இரு
 காலும் நொடிந்தே போனார்

சோர்ந்து தரையில் விழுந்து கிடக்கிற
 சோக நிலையினை கண்டும் யூதர்
சேர்த்து சவுக்கினால் ஓங்கி யடிப்பது
 செய்யத்தகு செயலவா? இது
 செம்மை நெறி இயவோ

செந்நிர் வழிந்திடும் அன்புடலை மேலும்
 சிலுவை அழுத்தியதே இயேசு
இன்னும் நடந்தடி முன்வைக்கப் பார்கையில்
 இடறி விழுந்தாரே சென்ற
 தடமும் பிறழ்ந்தனரே

கரெலென் திருந்த சிரேனே சீமோனைக்
 காவலர்கள் அழைத்தே - அச்சம்
உறது சிலுவையை ஒருமுறை தூக்கி நீ
 உதவி புரிவாய் எனவே அவனும்
 ஓடிச் சுமந்தனே

**இன்று**

தொழில் சிலுவையை மேலும் ஒருமுறை
 தூக்கி சுமந்து வந்தார் - இயேசு
ஆளைப் புதுப்பிக்கும வேலையைச் செய்திட
 ஆட்களைத் தேடி வந்தார் - பல
 நாட்களாய் வாடிக்கிடந்தார்.

கூனிக் குறுகிடும் வாழ்வை யறியாதோர்
 கோலந் தனைப் பார்த்தார் - அவர்
மேனியில் தங்கததால் ஆன சிலுவைகள்
 மட்டும் பொலிதல் கண்டார் - அவரை
 விட்டுத் தூரமாச் சென்றார்

சோர்ந்து விடாதேசு யாவருக் காகவும்
 சிலுவை சமப்பது கண்டும் கிறிஸ்தவர்
சேர்ந்து சிலுவையைச் கோவில்கள் சின்னமாய்ச்
 செய்து குவித்தல் சரியோ? மகிழ்
 வெய்தி களித்தல் நெறியோ?

செந்நீரைக் கொட்டியே இவ்வையகம் மீட்கவே
 சிலுவைதனை சுமந்தோர் - இங்கே
இன்னும் உலகில் துன்பங்கள் பட்டிட
 எம்மை அழைப்பது ஏன்? என் போர்
 பொம்மைக் கிறிஸ்தவர் காண்!

**என்று?**

சீமோனைப் போலவே யாவருமே ஒன்றாய்ச்
 சிலுவை சுமப்பதென்றோ? இங்குத்
தாமாய்க் கிறிஸ்தவர் ஏசுவுடன் சேர்ந்து
 தாரணி பட்பதென்றோ? அவர்
 போரணி காட்சி நன்றோ?

தி. தயானந்தன் பிரான்சிஸ்

## திரு. எஸ். எஸ். செல்லத்துரை மறைந்தார்

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் முன்னாள் அதிபரும் நமது ஆதீனத்தில் நீண்டகாலம் பொருளாளராகவும் கடமையாற்றிய திரு S. S. செல்லத்துரை சென்ற வெள்ளிக்கிழமை 10.3.95 தமது எண்பத்தினாலாவது வயதில் மகிமைக்குள் பிரவேசித்தார்.

மறைந்து போன பேராயர் சபாபதி குலேந்திரன் இவரைப்பற்றி எழுதுகின்ற பொழுது 'வடமராட்சியின் ஏக பிரதிநிதியாக நமது ஆதீன விவகாரங்களில் கலந்து கொண்ட திரு. S. S. செல்லத்துரையின் சிந்தனைகள் மாசுபடாத தென்றல் காற்று' போல இருந்தது என்று குறிப்பிட்டுள்ளார்.

திரு. S. S. செல்லத்துரை ஒரு தலைசிறந்த விஞ்ஞான ஆசிரியர். ஆசிரியராகவே வடமராட்சி சமுதாயத்துக்கு அறிமுகமானவர். அவருடைய கற்பிக்கும் ஆற்றலுக்கும் அறிவுக்கும், துணைவேந்தர் அ. துரைராசா மரண பரியந்தம் சான்று பகர்ந்துகொண்டேயிருந்தார், துணைவேந்தர் துரைராசா போன்ற உடுப்பிட்டி வாலிபர்களின் திறமைக்கண்டு கொண்டு அதனை சரியான பாதையில் நெறிப்படுத்தி நாட்டுக்கும் வீட்டுக்கும் நற்பணியாற்றச் செய்தவர் திரு. செல்லத்துரை.

**கலாநிதி எஸ். ஜெபநேசன்**
பேராயர்

திரு. செல்லத்துரையின் வாழ்க்கை மக்களோடு பின்னிப்பிணைந்தது. கிறிஸ்தவர்கள், சாடியிலே நடப்பட்ட பூசெடிகள் போன்று சமுதாயத்தினின்றும் பிரிந்து வாழ்கின்றனர் என்ற ஒரு கருத்து நிலவுகின்றது. இது முற்றிலும் தவறு என்று நிரூபித்தும் வகையில் திரு. செல்லத்துரை வாழ்ந்தார். அவரின் உடை; பேச்சு, மக்களுடன் பழகும் முறை, (வாழும் 4ம் பக்கம் பார்க்க)

## வாழும் எழுத்துக்கள்



பாரதிதாசன்

### ஏசு நாதர் ஏன் வரவில்லை

தலை, காது, மூக்கு, கழுத்து, கை, மார்பு, விரல்,
 தாள் என்ற எட்டுறுப்பும்
தங்க நகை வெள்ளிநகை இரத்தின மிழைத்த நகை
 தையலர்கள் அணியாமலும்
விலை குறையும் ஆடைகள் அணிந்துமே கோயில் வர
 வேண்டுமென்றே பாதிரி
விடுத்த ஒரு சேதியால் விஷமென்று கோயிலை
 வெறுத்தார்கள் பெண்கள் புருஷர்

நிலை கண்ட பாதிரி பின் எட்டுறுப்பேயன்றி
 நீள் இமைகள் உதடு நாக்கு
நிறைய நகை போடலாம் கோயிலில் முகம்பார்க்க
 நிலைக் கண்ணாடியும் உண்டென
இலை போட்டழைத்ததும் நகை போட்ட பக்தர்கள்
 எல்லாரும் வந்து சேர்ந்தார்
இயேசு நாதர் மட்டும் அங்கு வரவில்லையே
 இனிய பாரத தேசமே

பாரதிதாசன்

நீதி ஜனத்தை உயர்த்தும் பாவமோ
எந்த ஜனத்துக்கும் இகழ்ச்சி.

# உதயதாரகை

ஆதின காரியாலயம், வட்டுக்கோட்டை
Estd 1841
மலர்: 156 24-03-1995 இதழ்: 12

## விசுவாசத்தோடு முன்னேறுவோம்

சாகும் வரை உண்ணா நோன்பை மேற்கொண்டிருந்த போர்க் கைதிகள் அனைவரும் தமிழீழத் தேசியத் தலைவர் திரு வே பிரபாகரன் அவர்களால், மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டது இன்றைய போர்ச் சூழ்நிலையில் ஒரு சிறந்த செயலாகும். சமாதானத்தை விரும்பும் அனைவரும் பெரு மகிழ்ச்சியுடன் இதனை வரவேற்றனர்.

விடுதலைப் போராளிகளின் இச் செயற்பாட்டையிட்டு சிறிலங்கா அரசும் மிக்க மிக்க மகிழ்ச்சியடைந்திருப்பதாகப் பிரதமர் திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்கா அறிவித்தார். மேலும் இச்செயல் அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளுக்குப் பேருதவியாய் அமையுமென்றும் சமாதான பாதையில் இன்று தோன்றியுள்ள தடைகளை நீக்கவும் காலதாமதமின்றி சமாதானத்தை முன்னெடுக்க உதவும் என்றும் தெரிவித்தார்.

பிரதமரின் மகள் ஜனாதிபதி சந்திரிக்கா அம்மையாரும், இந்த மனிதாபிமான நடவடிக்கைக்கு ஏற்ற பதில் செயற்பாட்டை மேற்கொள்வாரென நம்புகிறோம். தலைவர் பிரபாகரன் தமிழ் மக்களுக்கு அவசியமாகத் தேவைப்படும் அடிப்படைத் தேவைகளைத் தந்து சமாதானச் சூழலை உருவாக்கும்படி விடுத்த மூன்று கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்ட போதிலும் பெருந்தன்மையோடு கைதிகளை விடுதலை செய்தது போற்றத்தக்கது.

தமிழீழ மக்கள் அகிம்சை வழிப் போராட்டத்தையும், மனித உயிரை எவ்வளவிற்கு மதிக்கின்றனர். என்பதையும் கைதிகளை விடுவித்த செயல் தெளிவாக விளங்குகிறது. தமிழினத்தின் அடிப்படை மனித உரிமைகள் மறுக்கப்பட்ட போது முன்னர் மேற்கொள்ளப்பட்ட அகிம்சை வழி முயற்சிகளை அன்றைய சிறிலங்கா அரசு வன்முறையால் அகிம்சைப் போராட்டத்தைக் குலைக்க முயன்றதை நாம் அறிவோம். இதன் விளைவாகவே, தமிழ், மக்கள் ஆயுதப் போராட்டத்தில் இறங்க நேர்ந்தது. இவ் வரலாற்று உண்மையை தெற்கிலுள்ள பெரும்பான்மையான மக்கள் இன்று ஏற்றுக் கொள்கின்றனர்.

இன்று நமது திருச்சபை, தமிழரின் விடுதலைப் போராட்டத்திற்குப் பல வழிகளில் தம் பங்கை அளித்து வருகிறது. மூன்றாவது போர் தொடங்கினாலும், மரணத்திற்கு அஞ்சாமல் இறுதிவரை மக்களுக்குப் பணிசெய்வதே திருச்சபையின் தலையாய கடமை யென்பதே நமது நிலைப்பாடு.

மனிதாபிமானத்திற்குத் தமிழீழத் தேசிய தலைவர் தமது சாதனையினால் அளித்துள்ள பெருமதிப்பானது மனிதாபிமானம் நீதி, சமத்துவம் போன்ற பண்புகளைத் தெற்கிலும் ஆசிய மக்களின் மனங்களிலும் நிலைத்துச் செயற்பட வழி வகுக்கும் என்பதே எமது நம்பிக்கை. இந்த மண்ணுடன் பின்னிப்பிணைத்து இருக்கும் தமிழ்மக்களின் அவலங்களுக்கு ஒரு நல்ல முடிவு வர வேண்டியது அவசியம். சமாதானத்திற்கு ஓர் அரசியல் தீர்வுக்கு சிறிலங்கா இராணுவம் தடையாயிருந்தாலும் இத் தடைகளைச் சேனைகளின் கர்த்தா - நீக்குவார் என்பது நிச்சயம் எனவே சோர்ந்து போகாமல் விசுவாசத்தோடு செயற்பட முன் வாருங்கள்.

## யாழ்ப்பாணக் கல்லூரி பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணக் கல்லூரியின் பரிசளிப்பு விழா கடந்த வியாழக்கிழமை 16ம் திகதி கல்லூரி Quart-rangle இல் மாலை 5.00 மணிக்கு அதிபர் தலைமையில் A HYMN FOR CEYLON என்ற பாடலுடன் வண. S. கருணைராஜ் அவர்களின் ஜெபத்துடன் ஆரம்பமானது. வரவேற்புரையை செல்வன் K கபேஸ் நிகழ்த்த அதிபர் தனது அறிக்கையை வாசித்தார். ஆங்கிலப் பேச்சுப் போட்டியில் தங்கப்பதக்கத்தைப் பெற்ற செல்வி R வஜானி ஆங்கிலப் பேச்சையும், தமிழ்ப் பேச்சுப்போட்டியில் தங்கப்பதக்கத்தைப் பெற்ற செல்வன் N. குகபரன் தமிழ்ப் பேச்சையும் நிகழ்த்தினர். அதன் பின்னர் பிரதம விருந்தினர் வைத்திய கலாநிதி N. எதிர்வீரசிங்கம் பரிசளிப்பு உரையை நிகழ்த்தினார்.

இப்பரிசளிப்பு விழாவில் நாட்டியம், ஆங்கிலப் பேச்சு என்பன சிறப்பு நிகழ்ச்சிகளாக இடம் பெற்றன. பரிசில்களை வைத்திய கலாநிதி (திருமதி) C அம்பலவாணர் வழங்கினார்.

## வாலிபர் பாசறை

அராலித் திருச்சபையில் இம்மாதம் 19.03 95 ஞாயிற்றுக்கிழமை காலை ஆராதனையுடன் "வாலிபனே நீ எங்கே இருக்கிறாய்" என்ற சிந்தனைப்பொருளில் ஓர் முழு நாள் வாலிபர் பாசறை நடைபெற்றது. இப்பாசறையில் காலை ஆராதனையை செல்வி. சத்தியப் பிரியா சத்தியமூர்த்தி (தலைவர்) நடாத்த அருட் திரு அ. அ. போல் அருளுரை ஆற்றினார்.

இப்பாசறையில் காலை திருமறைப்படிப்பையும் அதனோடு சேர்த்து செய்தியையும் அருட்திரு ரெரன்ஸ் (மெதடிஸ்தவ திருச்சபை) போதகரும் மாலை திருமறைப்படிப்பையும் செய்தியையும் அருட்திரு டில்றுக்ஸன் ஜோசப் (அங்கிலிக்கன் திருச்சபை) போதகரும் நடாத்தினார்கள். அருட்திரு மில்ரன் பாடல்களை வழி நடாத்தினார்.

அருட்திரு எஸ் ஐ. ஆனந்தராஜன் தொகுப்புரை நடாத்தினார். மகேஸ் ஆசிரியர் தலைமைத்துவம் என்ற பொருளில் கருத்துரை வழங்கினார்.

இப்பாசறையில் கேள்வி பதில் கலந்துரையாடல் பாடல்கள் விளையாட்டுகள் சிந்தனையை தூண்டு செய்திகள் என்பன நடைபெற்றன. இப்பாசறையை சபை ஊழியன் திரு. டி எஸ். மதியாபரணம் ஒழுங்கு செய்து நெறிப்படுத்தினார். இருபது வாலிபர்கள் கலந்து கொண்டார்கள்.

டி. எஸ். மதி
அராலித் திருச்சபை

## எஸ். எஸ். செல்லத்துரை

3ம் பக்க தொடர்ச்சி

விதம் எல்லாமே வடமராட்சி மக்களுக்கு இயல்பானவை அவரிடத்திலே காணப்பட்ட கடின உழைப்பையும் எளிமையான வாழ்க்கை முறையையுங் கண்ட மக்கள் அவரை மனதார நேசித்தனர். விவசாயமும் தோட்டவேலையும் அவருக்கு கைவந்த கலைகள். கல்லூரி அதிபராக திகழ்ந்த காலத்திலும் திரு செல்லத்துரை பாமர மக்களுடன் இணைந்து சிந்தித்தார் ஒன்றாக வேலை செய்தார். வாழை, வெங்காயம், புகையிலை நெல் உற்பத்தி செய்வதில் உண்மையான ஆர்வம் காணப்பட்டது. இப்பணிகளை அவர் விரும்பினார் கிறிஸ்துவை தமது இரட்சகராக ஏற்றுக்கொண்டபின் திரு செல்லத்துரை அனைவருக்கும் சரணாகதி அன்புடன் சேவைசெய்தார். உடுப்பிட்டித் திருச்சபையின் பிதாமகன் என்றே இவரை குறிப்பிடலாம். உடுப்பிட்டித் திருச்சபைக்கு பணியாற்றச் செல்லும் ஊழியர்களுக்கு அவர் ஒரு பிதாவைப் போல் இருந்து செயற்பட்டார். ஜெபக்கூட்டங்கள் ஒன்றையும் தவற விடமாட்டார். அவருடைய பக்தி ஆரவாரமற்றது. மனுஷர் உங்களுடைய நற்கிரியைகளை கண்டு பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி உங்கள் ஒளி பிரகாசிப்பதாக. இதுவே திரு செல்லத்துரையின், இறையியல், வாழ்க்கைத் தத்துவம் பூலோகப் பயணத்தின் இலட்சியம்

நமது அத்தியட்சாதீனத்தால் இருபது வருடங்களுக்கு மேலாகப் பொருளாளராகவிருந்து தமது கடமையை நேர்மையுடனும் நிர்வாகத்திறனுடனும் செய்தார். பேராயர் சபாபதி குலேந்திரன் அவரை முழுமுற்றாக நம்பினார். பேராயர் அம்பலவாணர் அவர் மீது அளவற்ற அன்பும் மரியாதையும் வைத்திருந்தார்.

திரு செல்லத்துரையின் பிரிவிடன் எமது வடமராட்சிப் பாரம் பரியத்திலிருந்து ஒரு பெரிய ஆலமரம் விழுந்துவிட்டது போன்ற உணர்ச்சி ஏற்படுகிறது. இவருடைய சிறந்த வாழ்வுக்கும் சாட்சிக்கும் கர்த்தரைத் துதிப்போமாக.

## நவீல்ட் செவிப்புலன் விழிப்புலன் இழந்தோர் பாடசாலை இல்ல மெய் வல்லுநர் போட்டி

கைதடி நவீல்ட் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி 16. 3. 95 வியாழக்கிழமை பாடசாலை விளையாட்டரங்கில் நடைபெற்றது, இவ்விழாவிற்கு முதன்மை விருந்தினராக வைத்திய கலாநிதி த. வி ஜெயக்குலராஜா அவர்கள் கலந்து கொண்டார். போட்டியில் மஞ்சள் இல்லம் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. வெற்றி பெற்ற வீரர்களுக்கு திருமதி ஜெயக்குலராஜா அவர்கள் பரிசில்களை வழங்கினார்.

# செய்திச் சிதறல்

### மீனவர்களின் வலைகளை வெட்டியெறிந்த கடற்படை

யாழ் குடாநாட்டின் வடக்கு கடற்பரப்பில் வைத்து மீனவர்களது மீன் பிடி வலைகளை சிறிலங்கா கடற்படையினர் கண்டதுண்டமாக வெட்டி நாசப்படுத்தினர். பயத்தால் அஞ்சிய மீனவர்கள் செய்வதறியாது கரைக்கு வந்தனர். அப்பகுதிக் கடற்பரப்பில் தரித்துநின்ற 'வீரய ரய' என்ற பாரிய கப்பலிருந்தும் பீரங்கித் தாக்குதல்கள் செய்யப்பட்டன. மீனவர்களை அச்சுறுத்தும் வகையில் இத் தாக்குதல் இருந்ததாக மீனவர்கள் தெரிவித்தனர்.

### காலமானார்

உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி முன்னாள் அதிபரும் உடுப்பிட்டித் திருச்சபையைச் சேர்ந்தவருமாகிய S. S. செல்லத்துரை காலமானார். இவர் செல்வச்சந்திரன் (UK) செல்வராஜன் (UK) ஆகியோரின் தந்தையாராவார். இவர் யாழ்ப்பாண அத்தியட்சாதீனத்தின் பொருளாளராகவும், யாழ்ப்பாணக்கல்லூரி ஆளுனர் குழுவின் முகாமையாளர் மற்றும் பொருளாளராகவும் சிறந்த பணிகளை ஆற்றினார். அன்னாருக்கு உதயதாரகையின் இதய அஞ்சலிகள்.

### சமாதானப்பேச்சுக்களுக்கு மார்ச் 28ஆம் திகதி வரை காலக்கேடு

எமது மக்களின் அன்றாட அரசியப்பிரச்சனைகள் தொடர்பாக நீங்கள் எடுத்துள்ள முடிவை சமாதானம் என்ற உன்னத இலட்சியத்திற்காக மீள்பரிசீலனை செய்யுமாறு நாங்கள் உங்களை மீண்டும் வேண்டிக்கொள்கிறோம். 1995 மார்ச் 28 ஆம் திகதிக்கு முன்னராக உங்களிடமிருந்து ஒரு சாதகமான பதிலை நாம் பெறாத பட்சத்தில் சமாதானப் பேச்சுக்களைத் தொடர்வதா இல்லையா என்பது சம்பந்தமான மிகவும் வேதனைக்குறிய ஒருமுடிவை நாம் எடுத்துக்கொள்ள நிர்ப்பந்திக்கப்படுவோம்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரன் சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்காவிற்கு கடந்த 17ம் திகதி அனுப்பி வைத்த கடிதத்தில் திட்டவட்டமாக தெரிவித்திருக்கிறார்.

### உண்ணாவிரதமிருந்த புத்தக்கைதிகள் அனைவரும் விடுதலை

தம்மை விடுவிக்கும் முயற்சியில் ஈடுபடுமாறு அரசாங்கத்தைக் கோரி உண்ணாவிரதிகளிடமிருந்து வந்த புத்தக் கைதிகள் பதினாறு பேரும் மனிதாபிமான அடிப்படையில் தலைவர் திரு. வே. பிரபாகரனால் விடுதலை செய்யப்பட்டனர். இப்பதினாறுபேரில் இருவர் 16ம் திகதி அங்கிலிக்கன் ஆயர் அதி. வண. கெனத் பெர்னாண்டோவால் கொழும்பிற்கு கூட்டிச் செலலப்பட்டனர். மிகுதி பதினான்கு பேரும் தொடர்ந்தும் உண்ணாவிரதத்தை மேற்கொண்டு வந்தனர். எனினும் இப்பதினான்கு பேரையும் அவர்களது பெற்றோரினது வேண்டுகோளை ஏற்றும், அவர்களது உண்ணாவிரத போராட்டத்தை மதித்தும் சமாதான சூழலுக்கு தமது நல்லெண்ணத்தைத் தெரிவித்தும் விடுதலைப் புலிகள் விடுதலை செய்துள்ளனர்

## சுவிஷேட பிரபல்யம்

அரிகாம்போதி: (திருந்தாண்டகம்)

1. அண்ட சராசர மனைத்தும் படைத்துக்காக்கும்
அண்ணல் திருமகனில்லவனி வந்து
மண்டுகின்ற பவநெருப்பில் வீழ்த்துமாழும்
மானிடர்க்காய்ச் சிலுவை சுமந்திரத்தஞ்சிந்தி
நொந்தனன் என்றவுண்மை நோற்குமாறு
நுவல்கின்ற சுவிஷே டவாக்கியங்கள்
கோடானு கோடியுகம் கொழித்துவாழும்!

2. தந்தையும், தாயும்நான், தரும்யானே
தவிர்த்தென்னைப் போவதற்கு வழியேயில்லை
எந்த விதமாகிலும் நீர் என்னைக் கண்டே
இறையுலகு புகுந்திடலாமென்று இயேசு
சந்தைவெளி, கடற்கரைகள், மலைமுகடு
சத்திரங்கள், வாவடிகள், ஆலயங்கள்
முந்திநின்று மொழிந்த அருள் வாக்குத்தன்னை
முகிழ்ப்பதுவே சுவிஷேடச் செய்தியாமே!

3 ஏழைகளைக் குருடர்களைக் செவிடர்தம்மை
ஈனர்களைப், பாவிகளை, இடருற்றோரை
வாழையடிவாழையென வந்த தோன்றல்
வாழைந்த திருக்குமாரன்வையம்போந்து
தோழமையாற்களிப்புறவே செய்துயாண்டும்
துன்பத்தில் சுவடின்றிச் செய்தபான்மை
மாமழையிற்களித்திட்ட பயிர்சிரிக்கும்
மயிலாடும் தன்மைத்தே மகிழ்ந்துபாரீர்!

4. சென்னிமிசைச்சிலுவைதனைச் சுமந்தபோதும்
சிறியரெல்லாங்கூடிமிகவிகழ்ந்தபோதும்
பன்னரிய பலபாடுபட்டபோதும்
பாதகர்கள் பலவாறு வதைத்தபோதும்
"என்னிவர்கள் செய்கின்றார் அறியமாட்டார்
எந்தையே இவர்கட்கும் இரங்குமென்று"
மன்னவனெம் இயேசு பிரான் மலர்ந்தவார்த்தை
மகத்துவமே சுவிஷேட மாண்பதாகும்!

எழுதியவர்:

திரு. திருநாவுக்கரசு நாவேந்தன்
சிவா டிஸ்பென்சரி
384 கோவில் வீதி
நல்லூர வடக்கு
யாழ்ப்பாணம்

(பா இயற்றும் போட்டியில் பரிசு பெற்றது)

### மாகாணப் பணிப்பாளராக செல்வி. பெரியதம்பி

யாழ் கல்வி வலயம் ஒன்றின் பணிப்பாளராகக் கடமையாற்றும் செல்வி. தி. பெரியதம்பியை, வடகிழக்கு மாகாணப் பணிப்பாளராக உடன் நியமிக்க மாகாண கல்வி அமைச்சு பதில் செயலாளர் திரு .K தியாகராஜா முடிவு செய்துள்ளார்.

## இயேசுவும் யூத சட்டங்களும்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

ஒருவன் களவு செய்ததை இன்னொருவன் பார்த்து விடுகிறான். அவன் பார்த்ததைக் கள்வன் கண்டு விடுகிறான். தான் அவனால் பிடிபட்டுவிடுவோம் என நினைத்து கள்வன் கண்டவனைக் கொலை செய்யத் துரத்துகிறான். அவன் ஒரு கிறிஸ்தவன் வீட்டில் தஞ்சம் பெறுகிறான், அங்கு வருகிற கள்வன் 'ஒருவன் ஓடி வந்து இங்கு ஒளித்தானா? என்று அந்தக் கிறிஸ்தவனிடம் கேட்கிறான். அவர் 'இல்லை, என்று கூறவே- கள்வன் திரும்பிப்போய் விட்டான். 'நான் கிறிஸ்தவன், எனவே பொய்சொல்லக் கூடாது, என அவர் நினைத்திருந்தால் கள்வன் அவனைக் கொலை செதிருப்பான்.

எனவே சட்டம் என்பது பாவத்திற்கல்ல மாறாக பாவமற்ற தன்மைக்கே அழைத்துச் செல்ல வேண்டும். சட்டத்தை ஒரு சாட்டாக வைத்துக் கொண்டு ஆண்டவரின் அன்பின் அழைப்பை ஏற்காமல் அவரை மற்றவருக்குக்காட்டாமல் நாம் வாழமுடியாது.
இயேசு சட்டங்களை வழக்கங்களை கடைபிடித்த சம்பவங்களும் உள்ளன.

வரி செலுத்துதல் பற்றிய கேள்விக்கு சட்டத்திற்கு சார்பான பதில ஒன்றினையே இயேசு அளிக்கிறார். இன்னும் லூக்கா 4;16 இல் தாம் வளர்ந்த ஊராகிய நாசரேத்துக்கு அவர் வந்து தம்முடைய வழக்கத்தின்படியே ஓய்வுநாளில் ஜெப ஆலயத்தில் பிரவேசித்து----'

எனவே சட்டங்களை வழக்கங்களை யேசு கடைப்பிடித்த சம்பவங்களும் உள்ளன.

இறுதியாக கூறக்கூடியது- இயேசு சூழ்நிலைக்கொவ்வாத சட்டங்களை சட்டரீதியில் கொசுவை வடிகட்டி ஒட்டகத்தை விழுங்கும் தன்மையை புறக்கணிதார். சட்டங்களும் அவர் புதுவடிவம் கொடுத்தார். தாம் கூறியபடி அவர் சட்டங்ளை அழிக்க வரவில்லை. அவற்றை நிறைவேற்றவே வந்தார்.

# The Morning Star

Diocesan Office, Vaddukoddai 24 . 03. 1995


## EDITORIAL

### ....Young Men shall see visions

The old men dream dreams because they know what the past was and yearn for the return of the past. The young never lived in the past. They don't know what the past was, but they see the present with all its evil. They want to change the entire structure, so they see a vision - vision of a new world where justice prevails.

The youth, these days, see discrimination, destruction and violence. They are fed up with all the injustice in this world. They are disgusted with the whole system. They want to destroy the present system and create a new one in its place. So they set themselves up on a mission and their actions often baffle the old. This is because the old men dream of the past but the young men look into the future. They don't dream but see visions.

Like Amos, the youth, in their visions, see the Lord with his plumb-line; the wall is crooked when the plumb-line is set against it. It has to be brought down. There is political discrimination, social barrier and economic imbalance. Those in power are themselves either corrupted or are powerless to change the present socio-politico-economic situation.

Jeremiah, in his vision, saw an invasion of a mighty army from the Northern Country. This according to him would result in complete destruction of the nation. Through our own experience we learnt a bitter lesson. The occupation of the Peace Keeping Force from the Northern Country resulted in wanton destruction of at least a part of the nation.

Like Jeremiah, the youth of the country feel that, they have been given power to pluck up, to break down, to destroy, to overthrow, to build and plant (Jer 1:10) They think that it is their duty to destroy the present political structure, overthrowing the government ( it could have been democratically elected one or that came into power by usurpation) and then rebuild the nation where justice would prevail.

The young men have seen a vision of a new world order. Is it for better or for worse? - we don't know. But, if the grown ups feel that the energy of the youth should be sublimed to do something creative; they must first understand the mind of the youth. Then, they should guide the youth in the right direction. The grown ups and those in authority should never try to exploit the youth to achieve their own selfish motives or try to cheat them. In that case, the youth will become rebellious. Then, the sun will turn to darkness and the moon will turn to blood (Joel 2:38).

Let those in authority and high places repent and do justice. Or else, the youth will see visions and act accordingly. If the youth rise up, blood shall flow and fire and columns of smoke shall appear.

## 'THE MORNING STAR'

### List of Annual Subscribers

**ARALY**

C.W. Ashbury
Bethany Araly

**EARLALAI SOUTH**

Mrs S.V. Ariaratnam
Earlalai South Chunnakam
Mr. J. Thurairaja
Earlalai South Chunnakam
Mr.R.J Navaratnam
Earlalai South Chunnakam
Mr.A J. Navaratnam
Earlalai South Chunnakam
Mr.K Thurairaja
Earlalai South Chunnakam
Miss. Thevamalar Manikam
Earlalai South Chunnakam
Mr.G.D Jeyaratnam
Earlalai South Chunnakam
Mr.M. Jeevagandhi
Earlalai South Chunnakam

**EALALAI NORTH**

Mr.H.A Rajaratnam
Ranjastan Earlalai North Earlalai Then aruvi Surawathai Chunnakam
Mrs A. Thayanandan
Earlalai North Earlalai
Mrs. P. Rajasingam
Earlalai North Earlalai
Mr.S Sathiyaseelan
Earlalai North Earlalai
Mr. J.C Paul
60/23 Dr.Subramaniam Veethy
Chunnakam
Mrs. Rajakanthan
Kivicholai Lane Dutch Road
Uduvil West
Mr R.Sarvananda
Muthaliyar Valavu Chunnakam
Mr C R Rajasoundram
8th mile Post Mallakam.

**MANIPAY**

Mr M V Spencer
Green Memorial Hospital
Manipay
Mr.A Jayaseelan
c/o Y.M C.A Manipay
Mrs. Arnold
' Peacelyn ' Manipay Rd. Uduvil
Y.M.C.A
Manipay
Arulmani Boys Home
Manipay
The Director Elim house
Memoriel School lane Manipay
Green Hospital
Manipay
Mr N Jegatheesan
40 Post office Road Manipay

(to be Continued)

### Youth Camp

Araly, C. S. I. Church held one day youth camp on Sunday, 19.3.95. The theme was, 'O young man where are you?' Morning service was conducted by Miss. Sathiyapriya Sathiamoorthy. The Rev. A. A. Paul preached the Sermon.

The Rev. Terrence of Methodist Church conducted a Bible Study and gave a message on "Youth where are you?"

In the afternoon the Rev Dilruksan Joseph of Kopay Anglican Church conducted a Bible Study on "Friend why are you here?"

Mr. Mahes conducted a discussion on 'Leadership' Rev. Milton Solomon led the sing song Rev. S. I. Anantharajan summed up the days activities

Mr D. S. Mathiaparanam, the worker in-charge of the Church was the camp Leader. About 30 youths participated.

### New Salary Scales for Teachers

The accountant of Jaffna Education Department has instructed all divisional offices of the Education Department in Jaffna District to work out the new salary scales for teachers by April 6th.

According to the new salary scales all teachers will receive higher pay. They will be paid their arrears as these scales will come into retrospective effect from 1.1.95.

### Powerful Generators Needed to Supply Electricity within Peninsula

It is now estimated that 15 generators each of 500 K. watts power and 78 generators each of 250 K. W. power are needed to supply electricity with in Jaffna Peninsula.

12,000 barrels of diesel and 90 barrels of oil is needed for every month to run these generators.

Registered as a News Paper at the G. P. O. Sri Lanka. News Printed for the Jaffna Diocese of the Church of South India at the American Ceylon Mission Press. 182, 1st Cross Street, Jaffna on Friday the 24th of March 1995 and Published by Mr. G. Nadaraja, Diocesan office, Vaddukoddai.